சுருக்கம்

சிறுபான்மையினர் நலன்– அனைத்து கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் – 2015–16–ஆம் ஆண்டிற்கான செலவினமான ரூ.1,00,00,000/–ஐ விடுவித்து ஆணைகள் வெளியிடப் படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (சிநஆபி) துறை

அரசாணை (நிலை) எண். 40

நாள் 1.6.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
துன்முகி, வைகாசி 19

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 120, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 25.12.2011.
2. அரசாணை (நிலை) எண் 69, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி) துறை, நாள் 14.12.2015.
3. சிறுபான்மையினர் நல ஆணையரின் கடித எண். ஏ3/4328/2012, நாள் 18.2.2016.

--------

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் 2011–12–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி ஒரு பயனாளிக்கு ரூ.20,000/– வீதம் 500 பயனாளிகளுக்கு வழங்க, ஆண்டுதோறும் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–15ஆம் ஆண்டில் புனிதப்பயணம் மேற்கொண்ட 468 பயனாளிகளுக்கு உரிய செலவினத்தை வழங்க ஏதுவாக 2015–16ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 500 கிறித்தவர்கள் ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்)யில் ரூ.93.60 இலட்சத்தினை மட்டும் விடுவித்து அரசு ஆணையிட்டது. அத்துடன் 2015–16 ஆம் ஆண்டிற்கான புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கான நிதித் தேவையைப் பொறுத்தவரையில், அவர்களுக்கான புனிதப்பயண நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்புமாறும் சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்.

3. தற்போது, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறுபான்மையினர் நல ஆணையர், 500–க்கும் மேற்பட்ட பயனாளிகள் ஜெருசலேம் புனிதப்பயணம் செல்ல விண்ணப்பித்துள்ளதாகவும், 2015–16–ஆம் ஆண்டிற்கான பயனாளிகளுக்கான நிதியுதவியாக ரூ.1,00,00,000/– ஐ ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறும் கோரியுள்ளார்.

4. சிறுபான்மையினர் நல ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து 2015–16–ஆம் நிதியாண்டில், 500 கிறித்தவர்கள் புனிதப்பயணம் மேற்கொள்ள நிதியுதவியாக 2016–17–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட நிதியொதுக்கமான ரூ.1,00,00,000/–ஐ (ரூபாய் ஒரு கோடி மட்டும்) விடுவித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 800 ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AV கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள அரசு உதவித் தொகை – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு. 2235 – 60 – 800 – AV -0932)"

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஆணையர், சிறுபான்மையினர் நலன் அவர்கள் பெற்று, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அவர்களுக்கு பணமாக வழங்கிடாமல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்காணும் தன்வைப்புக் கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைக்க வேண்டும்.

(k) Deposits and Advances
(b) Deposits not bearing interest.
8443 00 Civil Deposit
800 other Deposit
DF Deposits of Tamil Nadu Minorities Economic
Development Corporation (TAMCO).
(DPC 8443 00 800 DF 000A) (Receipt)
(DPC 8443 00 800 DF 0000) (Outgo)

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண் 31197/பி,மி.பி/2016, நாள் 30.05.2016– ல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த. உதயச்சந்திரன்
அரசு செயலாளர் (பொ)

பெறுநர்
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை–2.
மாநில கணக்காயர், சென்னை–18/9
மாநில கணக்காயர், (தணிக்கை I & II), சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9.

நகல்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(பிந/வ.செ.பொது.I / வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/6/16

பிரிவு அலுவலர்

03/06/16